ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1658/36 - 2010 ජූනි 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.17

1658/36 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் (2009, மே 29 ஆந் திகதிய 1603/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) கட்டளைக்கான அட்டவணையை அத்தகைய கட்டளைக்கான அட்டவணையின் நிரல் II (துறைகள்) இல் காணப்படுவதாகிய அத்தகைய அட்டவணையின் நிரல் I (பீடம்) இல் காணப்படும் "கலைப்பீடம்" என்ற பதிவிற்கு நேரொத்தவாறான சகல பதிவுகளிற்கும் விடயங்களிற்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்:-

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| கலைப்பீடம் | 1. பொருளியல் துறை |
| | 2. ஆங்கிலத் துறை |
| | 3. புவியியல் துறை |
| | 4. இனப்புள்ளியியல் துறை |
| | 5. வரலாற்றுத் துறை |
| | 6. சர்வதேச தொடர்புகள் துறை |
| | 7. அரசறிவியல் மற்றும் பொதுக் கொள்கைத் துறை |
| | 8. சிங்களத் துறை |
| | 9. சமூகவியல் துறை.". |

திசாநாயக்க முதியான்செலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2010, யூன் 8.

7 - 137/1